# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 64 | 4 Pages | 06.10.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 64 | 4 பக்கங்கள் | 06.10.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டை வள்ளலார் இருந்திருந்தால் பாராட்டியிருப்பார்: பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை



டெல்லி,அக்.6

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் ராமலிங்க அடிகளாரின் 200வது பிறந்தநாள் கொண்டாட்ட நிறைவு விழா தமிழக ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. இந்த விழாவில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, "பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டை வள்ளலார் இருந்திருந்தால் பாராட்டியிருப்பார்" என்று கூறியுள்ளார். அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் ராமலிங்க அடிகளார், கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் 05.10.1823இல் பிறந்தார். கருணை ஒன்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்தார். அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதைக் குறிக்கும் வண்ணம் இவர்சமரசசுத்தசன்மார்க்கத்தைநிறுவினார். இவர்வடலூரில்சத்தியஞான சபையைஎழுப்பினார். 'வாடியபயிரைக்கண்டபோதெல்லாம்வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின் பசித்துயர் போக்க சத்தியதர்ம சாலையை நிறுவினார். அவர் ஏற்றிய அடுப்பு இன்றுவரை அணையாமல் தொடர்ந்து எரிந்த வண்ணம் பசியோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்புகிறது.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடைகளை எழுதினார். இவர் பாடிய பாடல்களின் திரட்டு திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. திருவருட்பா ஆறாம் திருமுறையில், எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன் என்றார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவிய அவர், சத்திய தருமச்சாலையையும், சித்தி வளாகத்தையும் உருவாக்கினார். இத்தனை பெருமைகளை கொண்ட வள்ளலாரின் பிறந்த நாளானஅக்டோபர்மாதம்5ம்தேதிஆண்டுதோறும்'தனிப்பெருங்கருணை நாள்'எனக்கடைப்பிடிக்கப்படும்எனதமிழ்நாடுஅரசுஅறிவித்திருக்கிறது. இந்நிலையில் அவரது பிறந்த நாளான இன்று சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வள்ளலார் திருவுருவச்சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய பிரதமர் மோடி, "இளைஞர்கள் தமிழிலும், சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் புலமை பெற வேண்டும் என்று வள்ளலார் விரும்பினார். அவர் காலத்திற்கு முன்னதாகவே சிந்தித்தவர். கடவுளைப் பற்றிய வள்ளலாரின் பார்வை பல்வேறு மதங்களுக்கு அப்பாற்பட்டவை. இந்த உலகத்தில் ஒவ்வொரு அணுவிலும் அவர் கடவுளின் அம்சத்தை கண்டார். வள்ளலாரின் போதனைகள் அனைவருடனும் அனைவரின் வளர்ச்சிக்காகவும் நம்பிக்கைக்காகவும் சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்துவதாக இருந்தது. மகளிருக்கு வழங்கப்பட்ட 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாவை அவர் உயிரோடு இருந்தால் பாராட்டி இருப்பார் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

## சிக்கிம் வெள்ளப்பெருக்கில் 6 ராணுவ வீரர்கள் உள்பட 19 பேர் பலி..103 பேரை தேடும் பணி தீவிரம்

காங்டாக், அக்.6

சிக்கிம் மாநிலத்தின் தீஸ்தா நதியில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கு காரணமாக 14 பேர் உயிரிழந்ததாகவும், 22 ராணுவ வீரர்கள் உள்பட 102 பேரை காணவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான சிக்கிமில் நேற்று முன் தினம் மேகவெடிப்பு ஏற்பட்டது. நேபாள எல்லை அருகே உள்ள லோனக் ஏரி பகுதியில் ஏற்பட்ட இந்த மேக வெடிப்பு காரணமாக டீஸ்டா நதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், சுங்தங் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் காரணமாக லச்சன் பள்ளத்தாக்கு பகுதியில் பல இடங்களில் சாலைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

இதனால், 23 ராணுவ வீரர்கள் உள்பட 102 பேர் காணாமல் போகினர். சிக்கிம் மாநில தலைநகரான காங்டாக், வெள்ளத்தால் மாநிலத்தின் பிற பகுதிகளில்இருந்துதுண்டிக்கப்பட்டுள்ளது. சிக்கிம்மாநிலத்தைநாட்டின் பிறபகுதிகளுடன்இணைக்கும்தேசியநெடுஞ்சாலையும்பலஇடங்களில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி மாயமானவர்களை தேடும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது.

இதனிடையே, சிக்கிம் மாநிலத்தில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதில் பலியான 19 பேரில் 6 பேர் ராணுவ வீரர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 16 ராணுவ வீரர்கள் உள்பட 100க்கும் மேற்பட்டவர்களை இன்னும் காணவில்லை என்றும் அவர்களை தேடும் பணி முழு வீச்சில் நடைபெறும் சிக்கிம் மாநில அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. சுமார் 3 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் சிக்கி தவிப்பதாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 2,500 பேர் மீட்கப்பட்டுள்ளதோடு, 6 ஆயிரம் பேர்நிவாரணமுகாம்களில்தங்கவைக்கப்பட்டுஇருப்பதாகவும் சிக்கிம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகள் தற்போதைக்கு சிக்கிம் மாநிலத்திற்கு வர வேண்டாம் எனவும் அந்த மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது. திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நீர்மின்நிலையமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால்மின்உற்பத்திபாதிக்கப்பட்டுஇருப்பதால் மீண்டும் மின் உற்பத்தியை தொடங்க அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் மாநில அரசுக்கு சொந்தமான ஹைட்ரோபவர்பவர் கார்ப்பரேஷன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## வீடியோவால் சர்ச்சையால் கண்ணீர் விட்ட ரோஜா: முன்னாள் அமைச்சர் கைது

திருப்பதி, அக். 6

ஆந்திர மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் ரோஜா, திருப்பதியில் கண்ணீர் மல்க செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நான் நிர்வாண படத்தில் நடித்ததாகக் கூறி, சித்ரவதை செய்கின்றனர். சட்டப்பேரவையிலும் சி.டி.க்கள் காட்டப்பட்டன. ஆனால், அதில் இருப்பது நான்தான் என நிரூபிக்கப்படவில்லை. தெலுங்கு தேசம் கட்சி பெண்களை விளையாட்டுப் பொருளாக நடத்துகிறது. எனது புகழ், முன்னேற்றத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், வாய்க்கு வந்தபடி முன்னாள்அமைச்சர் பண்டாரு சத்திய நாராயண மூர்த்தி பேசியிருக்கிறார். அவரை யாரும் கண்டிக்காதது ஏன்? ஆனால், சட்டம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது. எனது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அவதூறு பேசி, அரசியலை விட்டு அப்புறப்படுத்த வேண்டுமென தெலுங்கு தேசம் கட்சி நினைத்தால், அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும். இவ்வாறு ரோஜா கூறினார். இதற்கிடையில், அமைச்சர் ரோஜா குறித்த சர்ச்சை பேச்சுக்கு, மகளிர் ஆணையம் சார்பில் ஆந்திர மாநில டிஜிபிக்கு புகார் கடிதம் அனுப்பப்பட்டது. அதன்பேரில், முன்னாள் அமைச்சர் பண்டாரு சத்திய நாராயண மூர்த்தி மீது போலீஸார் நேற்று வழக்கு பதிவு செய்து, அவரைக் கைது செய்தனர்.

# உதவிகள் வழங்க ஒன்றிணைவோம்.. சிக்கிம் வெள்ள பாதிப்பு குறித்து முதல்வர் கவலை

சென்னை, அக். 6

சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தால் துயரில் ஆழ்ந்துள்ள அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதல்வர் மு.க ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்று சிக்கிம். இந்த மாநிலத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள லோனாக் ஏரி பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேக வெடிப்பு ஏற்பட்டது. கனமழை கொட்டி தீர்த்ததன் காரணமாக அங்குள்ள டீஸ்டா நதியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளத்தால் தலைநகரான காங்டாக், மாநிலத்தின் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுற்றுலாப்பயணிகளும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மேலும், டீஸ்டா நதியையொட்டிய டிக்சு, சிங்டாம், ராங்போ உள்ளிட்ட பல நகரங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. சிக்கிம் மாநிலத்தை



நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை பல இடங்களில் வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. இதனால், கடுமையான பாதிப்பு ஏற்பட்டது.

ஆறுகளையொட்டி வசிப்பவர்கள் உஷாராகாத நிலையில் இருந்ததால் பெரும்பாலானோர் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டனர். திடீர் வெள்ளத்தில் 22 ராணுவ வீரர்கள் உட்பட 102 பேரைக் காணவில்லை என மாநில அரசு தெரிவித்துள்ளது. 11க்கும் மேற்பட்ட பாலங்கள்சேதம்அடைந்துள்ளன. வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதில் மாயமான ராணுவ வீரர்களில் ஒரு வீரர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சரோஜ் குமார் தாஸ் என்ற அந்த வீரர் ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார். திடீர் வெள்ளத்தால் மாயமான நூற்றுக்கணக்கானோரை தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின், சிக்கிம் வெள்ளபாதிப்பு குறித்து தனது கவலையை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது:

சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள திடீர் வெள்ளத்தால் துயரில் ஆழ்ந்துள்ள அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாயமான நமது தீரமிகு ராணுவ வீரர்கள் மற்றும் பலரது நிலையை நினைத்துக் கவலை அடைகிறேன். பாதிக்கப்பட்டுள்ளோருக்குத் தேவையான உதவியையும் ஆதரவையும் வழங்கிட ஒன்றிணைந்திடுவோம்" என்று பதிவிட்டுள்ளார்.

# அவிநாசி அருகே உப்பிலிபாளையத்தில் இரும்பு கழிவுகளை கொட்ட வந்த லாரி சிறைபிடிப்பு

அவிநாசி, அக். 6

அவிநாசி அருகே உப்பிலிபாளையத்தில் இரும்பு கழிவுகளை கொட்ட வந்த லாரியை கிராமமக்கள் நேற்று சிறைபிடித்தனர். உப்பிலிபாளையம் ஊராட்சி பகுதியில், மர்ம நபர்கள் இரும்பு கழிவுகளை கொண்டு வந்து நீண்டகாலமாக கொட்டி வந்தனர்.

இதனால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசி, நிலத்தடி நீர் மாசுபடுவதாகவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்எனகிராமமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று யாரும் இல்லாத நேரத்தில், இரும்பு கழிவுகளை கொட்ட வந்த லாரியை பொதுமக்கள் சிறைப்பிடித்தனர். தகவலறிந்த சம்பவயிடத்துக்கு வந்த போலீசார், வருவாய்த்துறையினர், எச்சரிக்கை விடுத்து, உரிய அறிவுரை வழங்கி, கழிவுகளை கொட்ட வந்த லாரியை திருப்பி அனுப்பினர்.

# கணக்கம்பாளையத்தில் பசுமை குடில் ஆய்வு

திருப்பூர், அக். 6

கணக்கம்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடிலை தோட்டக்கலைத்துறைஇயக்குனர் பிருந்தாதேவி ஆய்வு செய்தார். திருப்பூர் மாவட்டத்தில் தோட்டக்கலைமலைப்பயிர்கள்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பணிகள் குறித்து, தோட்டகலைத்துறை இயக்குநர் பிருந்தா தேவி மற்றும் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆகியோர் ஆய்வு செய்தனர். திருப்பூர் வட்டாரத்தில் கணக்கம்பாளையம் கிராமத்தில் வேலுச்சாமி என்பவர் 3 ஆயிரம் சதுர அடியில் ரூ.12 லட்சத்து 66 ஆயிரம் அரசு மானியத்தில் அமைக்கப்பட்ட பசுமை குடில் பயிர் சாகுபடி குறித்தும் ஆய்வு செய்தனர்.

# பெண்ணிடம் நகையை பறித்த வாலிபர் போலீசில் ஒப்படைப்பு

திருப்பூர், அக்.6

திருப்பூர், நெரிப்பெரிச்சல் அடுத்த தோட்டத்துப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ராமநாதன். இவருடையமனைவி சங்கீதா (40). இந்நிலையில் சங்கீதா நேற்று வீட்டிற்கு வெளியில் துணி துவைத்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த வாலிபர் ஒருவர் சங்கீதா கழுத்தில் அணிந்திருந்த 4 பவுன் தங்கநகையை பறித்துகொண்டு தப்பினார்.

உடனே சங்கீதா கூச்சலிட்டதும் அந்த வாலிபரை அக்கம்பக்கத்தினர் துரத்தி பிடித்து தர்மஅடி கொடுத்து திருமுருகன் பூண்டி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்குசென்ற ரோந்து போலீஸ், அஸ்கர் அலி திருடனை மீட்டு போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் பி.என்.ரோடு மேட்டுப்பாளையம்பஸ்நிறுத்தம்பகுதியை சேர்ந்த விக்னேஷ் (27) என்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் வழக்கு பதிவுந்து விக்னேஷை கைதுசெய்துசிறையிலடைத்தனர்.

# கரைப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு செய்தி வெளியான 24 மணி நேரத்தில் மின் இணைப்பு

திருப்பூர், அக். 6

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்பதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை செய்தியாக வெளியிடப்பட்டிருந்து.

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டதின் பேரில் கரைப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு செய்தி வெளியான 24 மணி நேரத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் உத்தரவிற்கிணங்க, திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு உடனடி நடவடிக்கையாக மின் இணைப்பு வழங்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்பதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 3 மற்றும் 4 –ம் வகுப்புகளில் 126 மாணவ, மாணவியர்கள் ஒரே வகுப்பில் படித்து வருகிறார்கள். இந்த கட்டடம் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் பழுது நீக்கம் செய்யப்பட்டு இதுவரை வகுப்பறைக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் இருந்தது.

இது தொடர்பாக, பள்ளி மாணவ, மாணவியர்களின் பெற்றோர்கள் உடனடியாக மின்இணைப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு கோரிக்கை வைத்தனர்.

இது தொடர்பான செய்தி செய்தி நாளிதழில் வெளியிடப்பட்டிருந்தது.

மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிற்கிணங்க, பல்லடம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கே. மனோகரன் அவர்களின் தலைமையிலான குழு இப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு,

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் செய்தி வெளியான 24 மணி நேரத்திற்குள் இன்று (05.10.2023) காலை இப்பள்ளிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு மின் இணைப்பு வழங்கிய சமந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மின்சார வாரிய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்கள்.

'உடனடி நடவடிக்கையாக பள்ளிக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது நன்றியினை தெரிவித்தார்கள்.

## வணிக வளாகம் இறுதி கட்டப்பணி லாட்டரி, மது விற்ற 3 பேர் கைது

ஈரோடு, அக். 6

ஈரோடு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையை தடுக்க போலீசார் நேற்று முன்தினம் ரோந்து சென்றனர். இதில், ஈரோடு பெரியசேமூர் பகுதியில் லாட்டரி சீட்டு விற்றதாக வெட்டுக்காட்டு வலசு பழனியப்பா நகரை சேர்ந்த ராஜா(59) என்பவரை ஈரோடு வடக்கு போலீசார் கைது செய்தனர்.

நசியனூர் சாமிகவுண்டன்பாளையத்தில் லாட்டரி சீட்டு விற்றதாக அதே பகுதியை சேர்ந்த மணிகண்டன்(37) என்பவரை சித்தோடு போலீசார் கைது செய்தனர். இதேபோல், கவுந்தப்பாடி ஆவரன்காட்டூர் பகுதியில் மது பாட்டில்களை பதுக்கி வைத்துகூடுதல்விலைக்கு விற்றதாக கண்ணாடிபுதூரை சேர்ந்த ஆனந்தன்(31) என்பவரைபோலீசார் கைது செய்து, அவரிடம் இருந்து 6 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

## மதுரை 88வது வார்டில் தண்ணீர் தொட்டி திறந்து வைப்பு

மதுரை, அக். 6

மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுநிதியிலிருந்து அனுப்பானடி 88வது வார்டு தெய்வகன்னி தெருவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் 2 ஆழ்துளைகிணறுகளுடன் கூடிய தண்ணீர் தொட்டிகளை பூமிநாதன் எம்எல்ஏ திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தெற்கு மண்டலதலைவர்முகேஷ் சர்மா, மாமன்ற உறுப்பினர் பிரேமா, மதிமுக மாவட்ட செயலாளர் முனியசாமி, அவை தலைவர் சுப்பையா, மாநில தொண்டரணி து.செயலாளர் பச்சமுத்து, பகுதி செயலாளர் கோவிந்தன், வட்ட செயலாளர்கள் நாகரத்தினம், அமிர்தராஜ் திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் திருப்பதி, வட்ட செயலாளர் தாமோதரன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான இடத்தை அமைச்சர் சுவாமிநாதன் ஆய்வு

ராமநாதபுரம், அக்.06

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் செப்.11ந் தேதி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தன்று இமானுவேல் சேகரனாருக்கு பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட இடத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில்திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டு இருந்தார்.

அதனடிப்படையில், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு போக்குவரத்துக் கழகம் பணிமனைஅருகேஉள்ளவாரச் சந்தை கடை திடலில் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி, செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இமானுவேல் சேகரனாருக்கு ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைப்பதற்கான



இடத்தை பார்வையிட்டார்.

பின்பு இது சம்மந்தமாக, தமிழக முதல்வரிடம் தெரிவித்து இடம் குறித்து முடிவு செய்யப்பட்டு மணிமண்டபம் கட்டும் பணி துவங்கப்படும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், தியாகி இமானுவேல் சேகரனார் மகள் பிரபா ராணி உள்பட குடும்பத்தினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ராமநாதபுரம் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் பரமக்குடி செ. முருகேசன், ராமநாதபுரம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, மாவட்ட ஊராட்சிக் குழுத் துணைத் தலைவர் வேலுச்சாமி, பரமக்குடி நகராட்சித் தலைவர் சேது கருணாநிதி, துணைத்தலைவர் கேஏ எம் குணா, கமிஷனர், நகர்மன்ற உறுப்பினர்கள் வடமலையான், அப்துல்மாலிக், தனலெட்சமி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் கருப்பையா, செல்வி உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், செய்தி மக்கள் தொடர்பு மாவட்ட அலுவலர் லெ.பாண்டி, உதவி அலுவலர்கள் நா.விஜயகுமார், கயிலைநாதன்கழகத்தினர்கள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்பு, பரமக்குடியில் அமைந்துள்ள தியாகி இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மலர்வளையம்' வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து கமுதி பசும்பொன்னில் அமைந்துள்ள முத்துராமலிங்க தேவர் நினைவிடம் சென்றார்.

## தளி அருகே ஏரி புனரமைப்பு பணிக்கான பூமிபூஜை

கிருஷ்ணகிரி, அக்.06

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், கொமாரனப்பள்ளி கிராம ஊராட்சிக்குட்பட்ட கொத்த ஜீகூர் கிராமத்தில் பூவன் ஏரியை 10 லட்சம்ரூபாய்திட்டமதிப்பீட்டில் புனரமைக்கும் பணியினை ஊராட்சி ஒன்



றியக் குழுத் தலைவர் ஸ்ரீனிவாசலு ரெட்டி பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். இவ்விழாவில், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சந்திரப்பா, மு. ஊ.மன்ற தலைவர் நாராயாண ரெட்டி, பேளகொண்டப்பள்ளி ஊராட்சி தலைவர் எல்லப்பா மற்றும் ஊர் பொதுமக்கள், கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## ஊராட்சி தலைவரின் முறைகேடுகள் அம்பலம்

நாமக்கல், அக்.06

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வண்டி நத்தம் ஊராட்சி தலைவராக இருப்பவர் குமார். இவர் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள வண்டி நத்தம் ஏரியில் வனத்துறை அனுமதி பெறாமலும் எவ்வித முன் அனுமதி இன்றியும் ஏல விதிமுறைகளை பின்பற்றாமலும் சீமைகருவேலமரங்களை வெட்டி வருவதை ஆதார பூர்வமாக செய்தி வெளிவந்தது. இதனைத்தொடர்ந்துமாவட்ட ஆட்சியர் கவனத்திற்கும் சென்றது. இதனைத் தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில், அதிகாரிகள்அப்பகுதியில் ஆய்வு





மேற்கொண்டார்கள்.

தற்போது வெட்டப்பட்ட சீமைக்கருவேல மரங்கள் ஏலத்தில் விட ஊராட்சி நிர்வாகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முறைகேட்டில் ஈடுபட்ட ஊராட்சி தலைவருக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிராம மக்கள் நமது கிராமத்திற்கு நல்லது செய்வார் என்றுதான் ஊராட்சி தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால், வண்டிநத்தம் ஊராட்சி தலைவர் குமார் முறைகேட்டில் ஈடுபட்டது கிராம மக்களே முகம் சுளிக்க வைக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டார் என்பது வேதனைக்குரியது. மேலும் வண்டி நத்தம் ஊராட்சிக்கு ஊராட்சி தலைவர் குமார் ஒரு சாபக்கேடு என்று சமுக ஆர்வலர்கள் என்று தங்களது வேதனையை தெரிவிக்கின்றனர்.

## பெரியகுளத்தில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள் வன உயிரினங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பேரணி

தேனி, அக்.06

தேனி மாவட்டம், பெரியகுளம், தேவதானப்பட்டி வனச்சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வனஉயிரின வார விழா 2023 முன்னிட்டு வனஉயிரின வார விழா விழிப்புணர்வு பேரணி அக்05 தேதி நடைபெற்றது.

பெரியகுளம் தென்கரை திருவள்ளுவர் சிலை பகுதியில் ஆரம்பித்து பெரியகுளம் வடகரை பழைய பேருந்து நிலையம் வரை பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள் வன உயிரினங்களை பாதுகாப்பது குறித்து பொதுமக்களுக்கு இருசக்கர வாகனம், ஊரவலமாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர்வு



பேரணியை பெரியகுளம் உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார். உதவி வன பாதுகா வலர் சக்திவேல் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தேவதானப்பட்டி வனச்சரக அலுவலர் டேவிட் ராஜா முன்னிலை வகித்தார். பெரியகுளம் காவல் நிலைய ஆய்வாளர் மீனாட்சி, தென்கரை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சுல்தான் பாஷா, பெரியகுளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பிரேம் ஆனந்த், தேவதானப்பட்டி வனச்சராக வனவர், வனக்காப்பாளர்கள், பெரியகுளம்விக்டோரியா நினைவு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், என்.ஆர். தியாகராஜன் கல்லூரி நர்சிங் மாணவிகள், போடி ஏல விவசாய சங்க கல்லூரி மாணாக்கர்கள் , தென்கரை பேரூராட்சி கவுன்சிலர் தேவராஜ், அரிமா சங்கம் மாவட்ட தலைவர் ராமநாதன் ,பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர் பெருமக்கள், மாணாக்கர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் வன உயிரினங்களை பாதுகாப்பது குறித்து பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர்.

## பரமக்குடி ரயில் நிலையத்தில் அமைந்துள்ள என்.எல்.சி. பொதுக்கழிப்பிடத்தை இரயில்வே நிலைய அதிகாரி ஐயப்பன் திறந்து வைத்தார்

ராமநாதபுரம், அக்.06

பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் இரயில் பயணம் இன்றியமையாததாக அமைந்துள்ளது. குழந்தைகள், முதியவர்கள், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள்மட்டுமின்றி, தூர தொலைவில் இருந்து வரும் யாத்திரிகர்கள், பயணிகள் அனைவரும் இரயில் பயணத்தையே விரும்புவார்கள்.

மேலும், நமது ராமநாதபுரம் மாவட்டத்தில், புண்ணியஸ்தலமான ராமேஸ்வரம் அமைந்துள்ளதால் இந்தியாவின் அனைத்து மாநிலங்கள், வெளிநாட்டினர்கள், தமிழ்நாட்டின் அனைத்து



மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள், யாத்திரிகர்கள் இரயில் பயணம் செய்வதையே விரும்புகின்றனர்.

இதனிடையே, ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி இரயில் நிலையம் மதுரைக்கு அடுத்தபடியாக வருமானம் ஈட்டி தருவதில் முதன்மை பெற்ற இரயில் நிலையமாகும்.

இந்நிலையத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்வர். ரயில் நிலையத்தை சுற்றிலும் ஏராளமான வணிக நிறுவனங்கள் நிறைந்துள்ள பகுதியாகும். இம்மக்களின் நீண்டகால கோரிக்கைகளில் பொதுகழிப்பிடம் வேண்டுமென்பதும் ஒன்றாகும்.

அதனடிப்படையில்,பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில்,பரமக்குடி இரயில் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள என்எல்சி பொதுகழிப்பிடம் கட்டிடத்தை இரயில் நிலைய அதிகாரி ஐயப்பன் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், நகர் முக்கிய பிரமுகர், அலுவலர்கள், பணியாளர்கள் பங்கேற்றனர்.





விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடை கட்டிடத்தினை உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, விழாப் பேரூரையாற்றினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன், மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, விக்கிராவாண்டி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சங்கீதா அரசி, விக்கிரவாண்டி பேரூராட்சி மன்ற தலைவர் அப்துல்சலாம், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பாலாஜி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் யசோதா தேவி உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## காட்பாடி காந்தி நகரில் உள்ள அக்சிலியம் கல்லூரியில் 63 வது பட்டமளிப்பு விழா

வேலூர், அக்.06

வேலூர் அக்சிலியம் கல்லூரியில் 63வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர்.பேரா. டி.ஆறுமுகம் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்து 344 இளங்கலை மாணவிகள், 251 முதுகலை மாணவிகள், 23 ஆய்வியல் நிறைஞர் ஆகியோருக்குப் பட்டமளித்தார்.

இளைய தலைமுறையினர் துடிப்புடன் செயல்பட்டு நல்லறிவாய் வளர்ந்து சமூகத்திற்கு சிறப்பாகத் தொண்டாற்ற வேண்டுமென்று மாணவியர்களுக்கு ஊக்கமும், ஆக்கத்திறனும் பெருகிடும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.

மேலும், பட்டம் பெற்ற மாணவிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். இவ்விழாவில் கல்லூரிச் செயலர் அருட்சகோ.மேரி ஜோஸ்பின் ராணி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் அருட் சகோ. ரா.ஜெயசந்தி




வரவேற்புரை வழங்கினார்.

தேர்வாணையர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அருட்சகோ. அ.ஆரோக்கிய ஜெயசீலி, துணை முதல்வர்கள் முனைவர் அருட்சகோ. அ.அமலா வளர்மதி (சுழற்சி I), அருட்சகோ. ஜூலியானா அக்னஸ் விக்டர் (சுழற்சி II), அனைத்துத் துறைத் தலைவர்களும் மற்றும் பேராசிரிய பெருமக்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

இதில் 500க்கும் மேற்பட்ட மாணவிகளும், மாணவிகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# தமிழ்நாடு அரசின் அறிவிப்பை ஏற்று 2 ஆசிரியர் சங்கங்கள் போராட்டம் வாபஸ்: 11 நாட்களுக்கு பின் முடிவுக்கு வந்தது

சென்னை அக்.6

தமிழக முதல்வரின் அறிவிப்பையடுத்து, சென்னையில் கடந்த 10 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 2 ஆசிரியர் சங்கங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளனர். முன்னதாக போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று இரவு விடுவிக்கப்பட்டனர். சென்னை கல்லூரிச் சாலையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் கடந்த 10 நாட்களாக இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் சங்கத்தினர் தொடர் உண்ணாவிரதம் இருந்து வந்தனர். அவர்களை தொடர்ந்து, கடந்த 7 நாட்களாக தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் கூட்டமைப்பு, பகுதி நேர சிறப்பாசிரியர்கள் சங்கங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்களும் இரவு பகலாக தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு அரசியல் கட்சியை சேர்ந்த பிரதிநிதிகள் டிபிஐ வளாகத்துக்கு வந்து ஆதரவு தெரிவித்தனர்.



அதனால், ஆசிரியர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தி வந்தனர். இந்நிலையில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரடியாக இடைநிலை ஆசிரியர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி, கோரிக்கைகள் குறித்து கேட்டார். முதல்வரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பதாக கூறினார். ஆனாலும் இடைநிலை ஆசிரியர்கள் அதை ஏற்காமல் மீண்டும் போராட்டத்தை தொடர்ந்தனர். அவர்களை போலவே, ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுடன், பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவொளி, நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடனடியாக பணி வழங்க வேண்டும், பணி நியமனத்துக்காக நடத்தப்படும் தேர்வை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியத்திலாவது பணி நியமனம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரினர். அப்போது, தகுதித் தேர்வு மற்றும் ஆசிரியர் நியமனம் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதற்கு பிறகு இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்று இயக்குநர் தெரிவித்தார். அவரது பதிலில் திருப்தி அடையாத அவர்கள் மீண்டும் பள்ளிக் கல்வி வளாகத்தில் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். கல்வித் துறையை சேர்ந்தவர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளுமே தோல்வியில் முடிந்ததால், மேற்கண்ட சங்கங்களை சேர்ந்தவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் டிபிஐ வளாகமே ஆசிரியர்களால் நிரம்பி வழிந்தது.

இதையடுத்து அங்கு போலீசார்குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அனைத்து சங்கங்களுடன் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி, கலைந்து செல்ல கேட்டுக் கொண்டனர். ஆனால் யாரும் செல்லாமல் போராட்டத்தை தொடர்ந்தனர். இந்த பரபரப்பான சூழ்நிலையில், நேற்று முன்தினம் மாலையில் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சந்தித்தார். பிறகு மாலை 6 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது சில அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

அப்போது, சமவேலைக்கு சமஊதியம் கேட்கும் கோரிக்கையின் அடிப்படையில், 6வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் படி, பல்வேறு துறைகளில் 1.6.2009க்கு பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடு குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க 3 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இதை ஏற்று எண்ணும் எழுத்து திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சி நடப்பதாலும், வேலைநிறுத்தப் போராட்டத்தை கைவிட்டு மேற்கண்ட பயிற்சியில் சேருமாறும், பயிற்சியை முடித்து பள்ளிக்கு திரும்ப வேண்டும்.

மேலும், பகுதிநேர ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.2500 ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ரூ.10 லட்சம் வரை மருத்துவ காப்பீடு அறிமுகம் செய்யப்படும். அதற்கான காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும். தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருப்பவர்களுக்கு உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 53 என்றும், இதர பிரிவினருக்கு 58 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. பல்வேறு வழக்குகள் ஆசிரியர்கள் தெரிவு சார்ந்து உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் உள்ளது.

171 தற்காலிக தொழில் ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்துக்கு கொண்டு வரும் அரசாணை வெளியிடப்படும். பொது நூலகத்துறையில் நீண்ட நாட்களாக பணியாற்றும் ஊரக நூலகர்கள் 446 பேர் 3ம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்படும் என்றும், எனவே, போராட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்ப வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். ஆனால், அரசு வெளியிட்ட இந்த அறிவிப்புகளை ஏற்க மறுத்த ஆசிரியர்கள் நேற்று முன்தினம் இரவு முழுவதும் பள்ளிக் கல்வி வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் அவர்கள் கலைந்துசெல்லவில்லை. இதையடுத்து, பள்ளிக் கல்வி வளாகத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர். போராட்டத்திற்குஅமைக்கப்பட்ட கூடாரங்களை அப்புறப்படுத்தவும், கலைந்து செல்லவும் போலீசார் அறிவுறுத்தினர். ஆனால் ஆசிரியர்கள் கலைந்துசெல்லவில்லை. எனவே, நேற்று காலையில் ஆசிரியர்களைபோலீசார் கைது செய்து பேருந்துகளில் ஏற்றிச் சென்று நுங்கம்பாக்கம் மற்றும் எழும்பூர் பகுதிகளில் உள்ள 7 திருமண மண்டபங்களில் தங்க வைத்தனர். அவர்களை விடுவிக்க வாய்ப்பு இருந்தும் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பகுதி நேர ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர். அதன் தொடர்ச்சியாக அவர்கள் அங்கிருந்து வெளியேறி தங்கள் சொந்த ஊருக்கு சென்றனர். மற்ற சங்கங்களை சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை கைவிடாமல் நேற்று மாலை வரை தொடர்ந்தனர். பின்னர், தகுதித் தேர்வு எழுதி காத்திருப்போர்சங்கத்தினரும் நேற்று மாலையில் தங்கள் போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தனர். ஆனால், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் மட்டும் தங்கள் போராட்டத்தை தொடர்கின்றனர். இதற்கிடையில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் நேற்று இரவு விடுவிக்கப்பட்டனர். ★ பகுதிநேர ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.2500 ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ★ ரூ.10 லட்சம் வரை மருத்துவ காப்பீடு அறிமுகம் செய்யப்படும். அதற்கான காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தும். ★ தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருப்பவர்களுக்கு உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 53 என்றும், இதர பிரிவினருக்கு 58 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. ★ 171 தற்காலிக தொழில் ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்துக்கு கொண்டு வரும் அரசாணை வெளியிடப்படும்.

# சென்னையில் 8 இன்ஸ்பெக்டர்கள் பணியிட மாற்றம்

சென்னை, அக். 6

சென்னை மாநகர காவல்துறையில் 8 இன்ஸ்பெக்டர்களை பணியிட மாற்றம் செய்து கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: சென்னை மடிப்பாக்கம் சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டராக இருந்த செல்வகுமார் மத்திய குற்றப்பிரிவுக்கும், சென்னை மாநகர பாதுகாப்பு பிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த பீர் பாஷா அண்ணாசாலை சட்டம் ஒழுங்குக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த தர்மராஜ் நந்தம்பாக்கம் சட்டம் ஒழுங்குக்கும், காத்திருப்போர் பட்டியலில் இருந்த சரவணன் மடிப்பாக்கம் சட்டம் ஒழுங்குக்கும், உளவுபிரிவு இன்ஸ்பெக்டராக இருந்த செல்வி ஜாம்பஜார் சட்டம் ஒழுங்குக்கும், அண்ணா சாலை சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டராக இருந்த வீராசாமி மத்திய குற்றப்பிரிவு, சைபர் க்ரைமுக்கும், ஜாம் பஜார் சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டராக இருந்த ராஜேஸ்வரி கொளத்தூர் சட்டம் ஒழுங்குக்கும், நந்தம்பாக்கம் சட்டம் ஒழுங்கு இன்ஸ்பெக்டராக இருந்த சுப்ரமணியன் ஐஸ்அவுஸ் சட்டம் ஒழுங்குக்கும் பணியிடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்க வேண்டும்

மதுரை, அக். 6

வருவாய் துறை அலுவலர்சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை: தேனி மாவட்டத்தில் வருவாய் ஆய்வாளராக பணியாற்றிய வடிவேல், கடந்த செப்.23ம் தேதி நடந்த சாலை விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்தார். அவருடைய உடல் உறுப்புக்கள் அனைத்தும் தானமாக வழங்கப்பட்டுள்ளது. அவரால் 6 பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது. முதல்வர் அறிவிப்பின்படி வடிவேல் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செய்யப்பட்டது. வடிவேல் புதிய ஓய்வூதிய திட்டத்தில் பணியாற்றிய தால், அவருக்கு பணப்பலன்கள் கிடைக்காது. எனவே, வடிவேலுவின் குடும்பத்திற்கு தமிழ்நாடு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்க சிறப்பு முகாம்

ஈரோடு,அக்.6

ஈரோடு மாவட்டத்தில் 18 வயதுக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு, 'மாற்றுத்திறனாளி அடையாள அட்டை' வழங்குவதற்கு சிறப்பு முகாம் பல்வேறு இடங்களில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்குவதற்கான முகாம் பள்ளிகளில் நடைபெற உள்ளது. இம்முகாமில் உரிய ஆவணங்களுடன் வருவோருக்கு, அந்தந்த முகாம் நடக்கும் பள்ளியில் விபரங்கள் சேகரித்து, மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைவழங்க,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது. பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியிலும், 6ம் தேதி தாளவாடி அரசு மேல்நிலைப்பள்ளி, 10ம் தேதி ஈரோடு அரசு மகளிர் மேல்நிலை பள்ளியிலும், 11ம் தேதி டி.என்.பாளையம் பங்களாபுதூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், 12ம் தேதி பவானி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியிலும், 13ம் தேதி அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் முகாம் நடக்க உள்ளது. 17ம் தேதி கோபி வேங்கம்மையார் நகராட்சி உயர்நிலை பள்ளி, 18ம் தேதி சென்னிமலை அம்மாபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி, 19ம் தேதி சிங்கம்பேட்டை அரசு மேல்நிலை பள்ளியிலும், 20ம் தேதி சத்தியமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியிலும், 26ம் தேதி தாமரைக்கரை அரசு மேல்நிலை பள்ளியிலும், 27ம் தேதி கல்கடம்பூர் அரசு மேல்நிலை பள்ளியிலும் முகாம் நடைபெற உள்ளது.

# தமிழ்நாட்டில் கோயில்களை அரசு அபகரித்து வைத்துள்ளதாக பிரதமர் மோடி பேசியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, அக்.6

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களை அரசு அபகரித்து வைத்துள்ளதாக பிரதமர் மோடி பேசியதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து பேசிய முதலமைச்சர்; தமிழ்நாட்டில் உள்ள கோவில்களை அரசு கைப்பற்றியுள்ளதாக பிரதமர் மோடியின் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுக்கிறேன். தென் மாநிலங்களில் இந்து கோயில்களை மாநில அரசாங்கம் வலுக்கட்டாயமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. கோயில் சொத்துகளையும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் முறைகேடாகப் பயன்படுத்தி வருகிறது என்று தெலங்கானாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பிரதமருக்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் யாருக்காக பேசுகிறார்? யாருடைய குரலை எதிரொலிக்கிறார்? எதைத் தவறு என்கிறார் பிரதமர்? பிரதமர் பார்வையில் தான் தவறு இருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் 1,000 கோயில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தி இருக்கிறோம். இது தவறா? வரலாற்று சிறப்புமிக்க 112 கோயில்களை சீர்செய்ய ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்தது தவறா? 2 ஆண்டுகளில் ரூ.3.50 கோடி மதிப்பிலான கோயில்கள் மீட்கப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசம், அந்தமான், தெலங்கானா என எங்கு போனாலும் தமிழ்நாட்டை பற்றித்தான் பேசுகிறார். பிரதமரால் மறக்க முடியாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. ஒரு மாநில அரசின் செயல்பாடு குறித்து இன்னொரு மாநிலத்தில் பேசுவது முறையா? தர்மமா? பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் தவறான, அவதூறு செய்தியை சொல்வது சரியா?" என முதலமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமை அதிகரித்துள்ளது என்பதா? ஆளுநர் ரவிக்கு பொன்குமார் கண்டனம்

சென்னை, அக்.6

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் நேற்று வெளியிட்ட அறிக்கை: நீண்ட நெடும் காலமாக சமூக நல்லிணக்கம் நீடித்து வரும் தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமைகள் அதிகரித்திருப்பதாக ஆளுநர் ரவி கூறியிருப்பது கண்டனத்திற்குரியதாகும். ஆளுநர், பாஜவுக்கு வாக்கு சேகரிக்கும் வேலையை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார். தற்போது நந்தனார் பிறந்த மண்ணான கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் மா.ஆதனூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பூணூல் அணிவித்திருக்கிறார்.



தலித் மக்கள் பூணூல் அணிவதன் மூலம் அவர்களையும் மேட்டுக்குடி மக்களாக மாற்றிவிட்டதாக எண்ணுகிறாரா ஆளுநர்? பூணூல் அணிந்தால் மேட்டுக்குடியாகி விடுவார்கள் என்பது மக்களை ஏமாற்றும் முயற்சி மட்டுமல்ல, மீண்டும் சனாதனத்தை மறைமுகமாக இந்த மண்ணில் ஊன்றும் முயற்சியாகும். ஆளுநர் செய்ய வேண்டிய ஆயிரம் வேலைகள் காத்திருக்கிறது. அடித்தட்டு மக்களுக்கான திட்டங்கள் குறிப்பாக, மாணவர்களின் எதிர்கால திட்டங்களுக்கான மசோதாக்கள் ஆளுநர் மாளிகையில் தூங்கிக் கிடக்கிறது. அவற்றை எடுத்து பார்க்க ஆளுநருக்குநேரமில்லை. அதைவிடுத்து சனாதனத்தை பரப்புவதிலும் பாஜவுக்கு வாக்கு சேகரிப்பிலும் கவனம் செலுத்தி செயல்பட்டு வருகிறார். அவருக்கு அதில் ஆர்வம் இருந்தால் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சனாதனத்தை கையில் எடுத்து, பாரதிய ஜனதாவுக்கு வேலை செய்யட்டும்.

# உதவி வனப்பாதுகாவலர் மெயின் தேர்வுக்கு ஹால் டிக்கெட்

சென்னை, அக்.6

உதவி வனப்பாதுகாவலர் தேர்வுக்கான ஹால் டிக்கெட் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. டிஎன்பிஎஸ்சி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அஜய் யாதவ் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

தமிழ்நாடு வனப்பணி (குரூப் 1ஏ பணி) உதவி வனப் பாதுகாவலர் பதவிக்கான முதன்மை எழுத்து தேர்வு வருகிற 13ம் தேதி 17ம் தேதி வரை சென்னை மாவட்ட மையத்தில் நடைபெற உள்ளது. தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட நுழைவு சீட்டுகள் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவு சீட்டினை பதிவிறக்கம் செய்ய முடியும்.




# 2023–2024ம் கல்வியாண்டிற்கான சித்த மருத்துவ மேற்படிப்புக்கு விண்ணப்பம்

சென்னை, அக். 6

அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளில் உள்ள எம்.டி சித்த மருத்துவ பட்ட மேற்படிப்புக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று ஓமியோபதித் துறை ஆணையரகம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஓமியோபதி துறை ஆணையரகம் வெளியிட்ட அறிக்கை: 2023 2024ம் கல்வியாண்டு தமிழ்நாட்டிலுள்ள அரசு சித்தா மருத்துவக் கல்லூரிகளில் சென்னை மற்றும் பாளையங் கோட்டையில் உள்ள இடங்களுக்கு, 20232024ம் கல்வியாண்டிற்கான எம்.டி. (சித்தா) மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான சேர்க்கை பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 2023ம் ஆண்டிற்கான சித்தா மருத்துவப் பட்டப்படிப்பிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு எழுதி, தேவையான தகுதி சதமான மதிப்பெண் பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.



விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை www.tnhealth.tn.gov.in என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் இவ்வாணையரகத்திலோ, தேர்வுக்குழுஅலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது. மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு www.tnhealth.tn.gov.in என்ற வலைதள முகவரியில் தெரிந்துக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை இன்று முதல் வரும் 20ம் தேதி முடிய மாலை 5 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால், கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லதுநேரில்சமர்ப்பிக்கவோ கடைசி நாள் வரும் 20ம் தேதி மாலை 5.30 மணி வரை ஆகும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கூடுதல் பெட்டிகள், தானியங்கி வசதிக்காக ரூ.450 கோடி கடனாக பெற டெண்டர்: மெட்ரோ நிர்வாகம் தகவல்

சென்னை, அக். 6

கூடுதல் பெட்டி, தானியங்கி வசதிக்காக ரூ.450 கோடி தேவைப்படுகிறது. அதை கடனாக பெற மெட்ரோ நிர்வாகம் டெண்டர் கோரியுள்ளது. சென்னையில் மெட்ரோ ரயிலில் காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுமக்கள் கூட்ட நெரிசலோடு பயணிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கூடுதலாக இரண்டு பெட்டிகளைஇணைக்கசென்னை மெட்ரோரயில் நிறுவனம் முடிவு செய்தது. அதன் அடிப்படையில் ஜிகா எனப்படும் ஜப்பான் நிதி நிறுவனத்திடம் ஒரு பெட்டிக்கு ரூ.10 கோடி வீதம் 180 பெட்டிகளை வாங்க நிதி கேட்கப்பட்டுள்ளது.




இந்நிலையில் அதற்கு முன்னதாக 30 ரயில் பெட்டிகளை வாங்க முடிவு செய்துள்ளது. ஒரு பெட்டிக்கு ரூ.10 கோடி வீதம் 30 ரயில் பெட்டிகளுக்கு ரூ.300 கோடி, தானியங்கி டிக்கெட் வசூலிக்கப்படும் முறைக்காக ரூ.150 கோடி என மொத்தம் ரூ.450 கோடி கடனாக பெற வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களுக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. குறைந்த நிதி ஆதாரம் என்பதால் இந்தியாவில் உள்ள பொதுத்துறை வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமே பெற்றுக் கொள்ளமுடியும். எனவே இதற்கான நிதி வேண்டி டெண்டர் விடப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில்களின் செயல்பாடுகளுக்கு நிதி டெண்டர் கோருவது இதுவே முதல் முறைஎனகூறப்படுகிறது.


Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 06.10.2023



# துவங்கியது கங்குவா படத்தின் இறுதிக்கட்ட சூட்டிங்.. தாய்லாந்து போன சூர்யா!

நடிகர்சூர்யாவின்நடிப்பில்அடுத்தடுத்தவெற்றிப்படங்கள்ரிலீசானவண்ணம் உள்ளன. அடுத்ததாக அவரது நடிப்பில் கங்குவா படம் உருவாகி வருகிறது. வரலாற்றுப் பின்னணியில் உருவாகிவரும் கங்குவா படத்தில் சூர்யாவின் ஜோடியாக திஷா பதானி நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை இயக்குநர் சிவா இயக்கி வருகிறார். சென்னை, கோவா, கொடைக்கானலின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் இந்தப் படத்தின் சூட்டிங் நடைபெற்று முடிந்துள்ளது.





தாய்லாந்தில் துவங்கிய கங்குவா படத்தின் இறுதிக்கட்ட சூட்டிங்: நடிகர் சூர்யாவின் அடுத்தடுத்த வெற்றிப் படங்கள் வெளியாகி மாஸ் காட்டியுள்ளன. சூரரைப் போற்று, ஜெய்பீம், எதற்கும் துணிந்தவன், விக்ரம் எனவித்தியாசமான ஜானர்களில் அடுத்தடுத்து படங்களை கொடுத்து வெற்றிப் பெற செய்துள்ளார் சூர்யா. இந்தப் படங்களை தொடர்ந்து தற்போது சிவா இயக்கத்தில் கங்குவா படத்தில் நடித்து வருகிறார். வரலாற்றுப் பின்னணியில் இந்தப் படம் உருவாகி வருகிறது. படத்தின் சூட்டிங், கோவா, கொடைக்கானலின் அடர்ந்த காட்டுப் பகுதிகள், சென்னை போன்ற இடங்களில் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் இருவேறு காலகட்டங்களை சொல்லும் கதைக்களத்தை சிவா கையில் எடுத்துள்ளார். 1500 வருடங்களுக்கு முந்தைய காலத்தை சொல்லும் ஒரு கதைக்களத்தையும் தற்போதைய காலகட்டத்தை சொல்லும் ஒரு போர்ஷனையும் சிவா எடுத்து முடித்துள்ளார். கோவாவில் துவங்கப்பட்ட இந்தப் படத்தின் சூட்டிங்கில் தற்போதைய காலகட்டத்தை எடுத்து முடித்துள்ளார். இதில் கதையின் நாயகி திஷா பதானி இணைந்திருந்தார். சூர்யா திஷா பதானியின் பாடல் காட்சி ஒன்றும் படமாக்கப்பட்டது.

படத்தின் தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்து வருகிறார். அவரது இசையில் உருவான பாடல் காட்சியில்தான் சூர்யா திஷா பதானி இணைந்து நடித்திருந்தனர். சிங்கம் படங்களை தொடர்ந்து சூர்யா தேவிஸ்ரீ பிரசாத் இந்தப் படத்தில் இணைந்துள்ளனர். தொடர்ந்து கமர்ஷியல் படங்களை கொடுத்துவந்த சிவா, இந்தப் படத்தில் வித்தியாசமான கதைக்களத்தை எடுத்துள்ளார். அவரது இந்த முயற்சியும் ரசிகர்களிடையே அதிகமான எதிர்பார்ப்பை கொடுத்துள்ளது.

கோவா, கொடைக்கானல், சென்னை போன்ற இடங்களில் இந்தப் படத்தின் சூட்டிங் எடுக்கப்பட்ட நிலையில், அடுத்த மற்றும் இறுதிக்கட்ட சூட்டிங்கிற்காக தற்போது சூர்யா உள்ளிட்ட படக்குழுவினர் தற்போது தாய்லாந்து சென்றுள்ளனர். இந்த சூட்டிங் இம்மாத இறுதிவரை நடக்கும் என்று படக்குழு சார்பில் அப்டேட் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் படத்தின் வரலாற்று போர்ஷன்கள் எடுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தப் படத்தின் இந்த ஷெட்யூலை நிறைவு செய்துவிட்டு சுதா கொங்கராவுடனான தன்னுடைய அடுத்தப் படத்தின் சூட்டிங்கில் நவம்பர் மாதத்திலிருந்து சூர்யா இணையவுள்ளார். இந்தப் படத்தின் அறிவிப்பு மற்றும் சில நடிகர்கள் குறித்த அப்டேட் அடுத்தடுத்த வெளியான நிலையில், இந்தப் படத்திற்கான எதிர்பார்ப்பும் மிகப்பெரிய அளவில் உள்ளது. இதனிடையே கங்குவா படத்தின் பேட்ச் வேலைகளும் ஒருபுறத்தில் விறுவிறுப்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

# கார்த்தி படத்தின் இசை வெளியீடு எப்ப தெரியுமா.. சூர்யா பங்கேற்க வாய்ப்பு




நடிகர் கார்த்தியின் ஜப்பான் படத்தை இயக்கி முடித்துள்ளார் இயக்குநர் ராஜூ முருகன். படம் தீபாவளி ரிலீசாக வெளியாகவுள்ளது. இந்தப்படத்தின் டீசர் உள்ளிட்டவை வெளியாகி மாஸ் காட்டியுள்ள நிலையில், அடுத்ததாக படத்தின் இசை வெளியீட்டை நடத்த படக்குழு திட்டமிட்டுள்ளது. படத்தில் கார்த்திக்கு ஜோடியாக அனு இமானுவேல் நடித்துள்ளார். ஜிவி பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

கார்த்தியின் ஜப்பான் பட இசை வெளியீடு குறித்த அப்டேட்: நடிகர் கார்த்தியின் 25வது படமாக ஜப்பான் படம் உருவாகியுள்ளது. இந்தப் படத்தை பிரபல இயக்குநர் ராஜூ முருகன் இயக்கியுள்ளார். படத்தின் டீசர் உள்ளிட்டவை வெளியாகி ரசிகர்களை வெகுவாக கவர்ந்த நிலையில், படத்தின் பாடல்களும், பிஜிஎம்மும் ரசிகர்களுக்கு சிறப்பான விருந்தளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜிவி பிரகாஷ் இசையில் உருவாகியுள்ள இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடத்தில் தீபாவளி ரிலீசாக வெளியாகவுள்ளது. படத்தில் கார்த்திக்கு ஜோடியாக அனு இமானுவேல் நடித்துள்ளார். இயக்குநர் மில்டன் முக்கியமான கேரக்டரில் நடித்துள்ளார். வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் சூட்டிங் தூத்துக்குடி உள்ளிட்ட இடங்களில் படமாக்கப்பட்டுள்ளன. மேலும் சென்னை ஈசிஆரில் 200 குடிசைகள் போடப்பட்டு பிரம்மாண்டமான செட்டில் படத்தின் அடுத்தக்கட்ட சூட்டிங் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இந்தப் படத்தில் இசையமைப்பாளர் ஷான் ரோல்டன் ஒரு பாடலை பாடியுள்ளார்.

இதையொட்டி கடந்த சில வாரங்களுக்கு முன்பு தன்னுடைய மகிழ்ச்சியை ஜிவி பிரகாஷ் ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். படத்தின் மெலடி பாடலை ஷான் ரோல்டன் பாடியுள்ளதாகவும், அபாரமான அவரது குரலில உருவாகியுள்ள அந்தப் பாடல் தன்னுடைய இசை வாழ்க்கையில் மறக்க முடியாத பாடலாக அமைந்துள்ளதாகவும், அவரது குரலை பதிவு செய்ததில் மிகுந்த மகிழ்ச்சி என்றும் கூறியிருந்தார். இந்நிலையில் இந்தப் படத்தின் இசை வெளியீடு இந்த மாத இறுதியில் நடத்தப்பட உள்ளதாக படக்குழு சார்பில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அக்டோபர் 28ம் தேதி இந்த இசை வெளியீடு சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல் பகிரப்பட்டுள்ளது. தற்போது கங்குவா படத்தின் சூட்டிங்கிற்காக தாய்லாந்தில் உள்ள நடிகர் சூர்யாவும், படத்தின் சூட்டிங்கை நிறைவு செய்துவிட்டு வரும் பட்சத்தில் கார்த்தியின் ஜப்பான் பட இசை வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பார் என்று கூறப்பட்டுள்ளது. ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ளது ஜப்பான் படம். சமீபத்தில் இந்தப் படத்தின் டப்பிங் குறித்த வீடியோவை நடிகர் கார்த்தி வெளியிட்டிருந்தார். இந்த வீடியோ ரசிகர்களை வெகுவாக கவர்ந்து, 6 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளை பெற்றது. தற்போது நலன் குமாரசாமி இயக்கத்தில் நடித்து வருகிறார் கார்த்தி. இந்தப் படத்தை தொடர்ந்து 96 படத்தின் இயக்குநர் பிரேம்குமார் இயக்கத்திலும் அவர் இணையவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# Asian Games 2023 இந்தியாவுக்கு ஒரே நாளில் 3 தங்கப்பதக்கம்!



ஆசிய விளையாட்டுப் போட்டியில் வியாழக்கிழமை (அக்.5) அன்று இந்தியா சார்பில் வில்வித்தை, ஸ்குவாஷ் மற்றும் மல்யுத்த விளையாட்டில் இந்தியா பதக்கம் வென்றுள்ளது. 19 வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இதுவரை இந்தியா 21 தங்கம், 32 வெள்ளி மற்றும் 33 வெண்கலம் வென்று 86 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது. முதல் மூன்று இடங்களில் சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளது.

வில்வித்தை மகளிர் காம்பவுண்டு பிரிவு: இதில் இறுதிப் போட்டியில் சீன தைபே அணியை வீழ்த்தி பர்னீத் கவுர், ஜோதி சுரேகா மற்றும் அதிதி கோபிசந்த் அடங்கிய இந்திய வீராங்கனைகள் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர். 230 ஸ்கோருடன் இந்தியா தங்கத்தை வென்றது. ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர்: தீபிகா பல்லிகல் மற்றும் ஹரிந்தர்பால் சிங் சந்து இணையர்ஸ்குவாஷ்கலப்புஇரட்டையர்பிரிவில்மலேசியாவை வீழ்த்தி தங்கம் வென்றனர். வில்வித்தை ஆடவர் காம்பவுண்டு பிரிவு: அபிஷேக், ஓஜஸ் மற்றும் பிரதமேஷ் ஆகியோர் அடங்கிய இந்திய அணியினர் இறுதிப் போட்டியில் தென் கொரியாவை வீழ்த்தி தங்கம் வென்றது. 235 ஸ்கோருடன் இந்தியா இந்த பதக்கத்தை வென்றது. ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டி: ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் சவுரவ் கோஷல் வெள்ளி வென்றார்.மல்யுத்தம்: மகளிர் 53 கிலோ மல்யுத்த போட்டியில் வெண்கலம் வென்றார் இந்தியாவின் ஆண்டிம் பங்கல்.

# உலக கோப்பை முதல் ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து: ரவிந்திரா, கான்வே அதிரடி சதம்




ஐசிசி ஒருநாள் உலக கோப்பை கிரிக்கெட்டின் முதல் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து வீழ்த்தியது. நியூசிலாந்து அணியின் டேவோன் கான்வே மற்றும் ரச்சின் ரவிந்திரா அபாரமாக ஆடி சதம் அடித்தனர். ஐசிசி ஒருநாள் உலக கோப்பை தொடர் நேற்று தொடங்கியது. அகமதாபாத்தில் நடந்த முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான இங்கிலாந்து அணியை நியூசிலாந்து எதிர்கொண்டது. டாம் லாதம் தலைமையிலான நியூசி அணியில் வில்லியம்சன், டிம் சவுத்தீ, லாக்கி ஃபெர்குசன், ஜோஸ்பட்லர் தலைமையிலான இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் காயம் காரணமாக களம் காணவில்லை.

டாஸ் வென்ற நியூசிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது. ஜானி பேர்ஸ்டோ, டேவிட் மாலன் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினார். டிரென்ட் போல்ட் வீசிய முதல் ஓவரிலேயே இந்த உலக கோப்பையின் முதல் சிக்சர், முதல் பவுண்டரி அடித்து கணக்கை தொடங்கினார் பேர்ஸ்டோ. வாய்ப்பு கிடைக்கும் போது ரன் குவித்த இருவரும் முதல் விக்கெட்டுக்கு 40ரன் சேர்த்தனர். முதலில் டேவிட் மாலன் 14 ரன்னில் வெளியேற தொடர்ந்து பேர்ஸ்டோ 33, ஹாரி புரூக் 25, மொயீன் அலி 11 ரன்னில் ஆட்டமிழந்தனர். அதன் பிறகு ஜோ ரூட் உடன் இணை சேர்ந்த கேப்டன் பட்லர் பொறுப்புடன் விளையாட ஆரம்பிக்க ஸ்கோர் உயர்ந்தது.

இருவரும் 5வது விக்கெட்டுக்கு 70ரன் குவித்தனர். பட்லர் 42பந்துகளில் 43ரன்னில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு வந்த லிவிங்ஸ்டோன் 20ரன்னில் நடையை கட்டினார். நீண்ட நேரம் தாக்குப்பிடித்த ஜோ ரூட் அரைசதமும் விளாசி 77ரன்னில் வெளியேறினார். அடுத்து கிறிஸ் வோக்ஸ் 11, சாம் கரன் 14ரன்னில் பெவிலியன் திரும்பினர். அப்போது இங்கிலாந்து 45.4 ஓவருக்கு 9 விக்கெட்களை இழந்து 252ரன் சேர்த்திருந்தது. கடைசி வரை களத்தில் இருந்த அடில் ரஷித் 15, மார்க் வுட் 13ரன் விளாசி கடைசி விக்கெட்டுக்கு 30ரன் சேர்த்தனர். அதனால் இங்கிலாந்து 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 282ரன் குவித்தது. நியூசி தரப்பில் ஹென்றி 3, பிலிப்ஸ் , சிக்னமாக பந்து வீசிய சான்ட்னர் ஆகியோர் தலா 2, போல்ட், ரவீந்திரா ஆகியோர் ஒரு விக்கெட் எடுத்தனர். இதில் சுழற்பந்து வீச்சாளர்கள் மட்டும் 5விக்கெட்களை அள்ளினர். அதனையடுத்து 283ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசி விளையாடத் தொடங்கியது. தொடக்க வீரர் விங் யங் ஆட்டத்தின் 2வது ஓவரில் கரண் வீசிய முதல் பந்தில் டக் அவுட்டாகி வெளியேறினார். அதன் பின் ஜோடி சேர்ந்த கான்வே, ரச்சின் ரவிந்திரா இங்கிலாந்து பந்து வீச்சை பந்தாடினர்.

நாலாபுறமும் பந்தை பறக்க விட்ட கான்வே 83 பந்திலும், ரவிந்திரா 82 பந்திலும் சதம் அடித்து இங்கிலாந்தை துவம்சம் செய்தனர். இங்கிலாந்தின் எந்த பந்துவீச்சாளராலும் இந்த ஜோடியின் அதிரடிக்கு அணை கட்ட முடியவில்லை. இறுதியில் நியூசிலாந்து அணி 36.2 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 283 ரன் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கான்வே 121 பந்தில் 152 ரன்னுடனும் (3 சிக்சர், 19 பவுண்டரி), ரவிந்திரா 96 பந்தில் 123 ரன்னுடனும் (5 சிக்சர், 11 பவுண்டரி) கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# உலகக்கோப்பை முதல் போட்டி: இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி!




உலகக்கோப்பை தொடரின் தொடக்க போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது. 13வது உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது. அதில் நியூசிலாந்து – இங்கிலாந்து அணிகள் மோதுகிறது. இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனையடுத்து இங்கிலாந்து அணியின் சார்பில் ஜானி பேர்ஸ்டோ மற்றும் டேவிட் மலான் ஆகியோர் முதலில் களமிறங்கினர். இந்த ஜோடியில் டேவிட் மலான் 14 ரன்களில் வெளியேற அவரைத்தொடர்ந்து பேர்ஸ்டோ 33 ரன்களும், ஹேரி புரூக் 25 ரன்களும், மொயின் அலி 11 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோ ரூட் அரை சதத்தை பதிவு செய்து அசத்தினார். ஜோ ரூட்டுடன் ஜோடி சேர்ந்த ஜோஸ் பட்லர் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி 43 ரன்கள் எடுத்திருந்த நிலையில் கேட்ச் ஆனார். அவரைத்தொடர்ந்து லிவிங்ஸ்டன் 20 ரன்களும், ஜோ ரூட் 77 ரன்களும், கிரிஸ் வோக்ஸ் 11 ரன்களும், சாம் கரண் 14 ரன்களும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். இறுதியில் அடில் ரஷித் 15 ரன்களும், மார்க் வுட் 13 ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். முடிவில் இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 282 ரன்கள் எடுத்தது.

நியூசிலாந்து அணியின் சார்பில் அதிகபட்சமாக ஹென்றி 3 விக்கெட்டுகளும், சாண்ட்னர் மற்றும் பிலிப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 283 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி பேட்டிங் செய்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக டெவோன் கான்வேயும், வில் யங்கும் களமிறங்கினர். வில் யங், தான் சந்தித்த முதல் பந்திலேயே கேட்ச்சாகி ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து கான்வேயுடன் ரச்சின் ரவீந்திரா ஜோடி சேர்ந்தார். இருவரும் தொடக்கம் முதலே அதிரடியில் இறங்கினர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை இருவரும் நாலாபுறமும் பவுண்டரிக்கு விரட்டினர். இதனால் நியூசிலாந்து அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. இந்த ஜோடியைபிரிக்கஇங்கிலாந்துபந்துவீச்சாளர்கள்பல்வேறுயுக்திகளைபயன்படுத்தியும் அனைத்தும் பலனளிக்கவில்லை. இங்கிலாந்து அணிக்கு சாதகமாக ஒரு வாய்ப்பை கூட இருவரும் வழங்கவில்லை. அபாரமாக பேட்டிங் செய்த இருவரும் சதம் அடித்து அசத்தினர். தொடர்ந்து அதிரடி காட்டிய கான்வே 150 ரன்களை கடந்தார்.

இறுதியில் நியூசிலாந்து அணி 36.2 ஓவர்களில் வெற்றி இலக்கை கடந்து 9 விக்கெட் வித்தியாசத்தில்அபாரவெற்றி பெற்றது. கான்வே ரச்சின்ரவீந்திராஜோடி இரண்டாவது விக்கெட்டு 273 ரன்கள் குவித்து அசத்தியது. கான்வே 152 ரன்களுடனும், ரச்சின் ரவீந்திரா 123 ரன்களும் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இங்கிலாந்து தரப்பில் சாம் கரன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். இங்கிலாந்து அணிக்குஇதுமிகப்பெரியதோல்வியாகஅமைந்தது. இந்ததோல்வியால், இங்கிலாந்து அணியின் ரன்ரேட்டும் பெரிய அளவில் சரிந்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.